செய்தி வெளியீடு எண்: 458 நாள் : 26.08.2013

# மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் திரு.ப.மோகன் அவர்கள் தலைமையில் பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்

***

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (26.08.2013) காலை 10.30 மணியளவில் சென்னை ராஜா அண்ணாமலைபுரம், தொழில் துறை மற்றும் வணிகத் துறை கூட்ட அரங்கில் பட்டு வளர்ச்சித்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் திரு.ப.மோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது, தொன்மையும், பாரம்பரியமும் மிக்க வேளாண்மை சார்ந்த தொழில்களில், பட்டு வளர்ப்பும் ஒன்று எனவும், குறைந்த முதலீடு, குறுகிய காலத்தில் வருவாய் பெற வாய்ப்பு என்ற அளவில் பட்டு தொழிலானது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மிகவும் ஏற்றதொரு விவசாயத் தொழிலாகும். குறிப்பாக பெருமளவு மகளிர் பங்கு பெறும் வாய்ப்பும், ஆண்டுக்கு பலமுறை வருவாய் பெறும் வாய்ப்புள்ள கிராமிய தொழில் ஆகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பட்டு வளர்ச்சித்துறை மற்றும் பட்டு விவாசயிகளுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. மல்பரி தோட்டங்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைச்ச 75 சதவிகிதமாக வழங்கப்பட்டு வந்த மானியம் தற்போது 100 சதவிகிதமாக வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி செய்ய வழங்கப்பட்டு வந்த ரூ.4125/– மானியத் தொகை ரூ.6,750/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேர் மல்பரி சாகுபடிக்கு அதிகபட்சமாக ரூ.16,875/– வழங்கப்படுகிறது. நவீன பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிக்கு ரூ.30,000/– என வழங்கப்பட்டு வந்த மானிய உதவி தற்போது ரூ.37,500/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆயிரம் சதுர அடியும் அதற்கு மேலும் பரப்பளவுள்ள பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட மானியம் ரூ,25,000 கூடுதலாகாக வழங்கப்படுகிறது என்றார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் கூறியதாவது, பட்டு மலர் என்ற தமிழ் மாத இதரூ ரூ.11.00 க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது விலை குறைக்கப்பட்டு ரூ.2.00 க்கு செப்டம்பர் 2012 முதல் பட்டு விவசாயிகள் பலன் பெற விற்பனை செய்யப்படுகிறது. 2012ஆம் ஆண்டில் வறட்சியின் காரணமாக உற்பத்தி குறைந்த போதிலும், 2012–13 ஆண்டில் பட்டு நூல் மற்றும் பட்டுக்கூட்டிற்கு அதிக விலை கிடைத்ததின் காரணமாக அரசுக்கு ரூ.16

இலட்சம் கூடுதல் வருவாய் கிட்டியுள்ளது. வெண்பட்டு உற்பத்திக்காக செயல்படுத்தப்பட்ட தொகுப்பு அபிவிருத்தி திட்ட செயலாக்கத்திலும், வெண்பட்டு உற்பத்தியிலும், தமிழ்நாடு எய்தியுள்ள சாதனையை மைய அரசின் மத்திய பட்டு வாரியத்தின் வெளியீடான "இந்தியன் சில்க்" என்ற மாத இதழ் அதன் தலையங்கத்தில், வெண்பட்டு உற்பத்தியில், தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது மிகவும் பெருமைப்படத் தக்க ஒன்றாகும். அது மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையிலான அரசு, தமிழகத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சிக்காக, பல்வேறு சிறப்பான திட்டங்களை வடிவமைத்து முனைப்புடன் செயல்படுத்தி வருவதால், பட்டுக்கூடு உற்பத்தித் திறனில், தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகவும், அதேபோன்று, வெண்பட்டு உற்பத்தியிலும், இளம் பட்டுப்புழுக்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதிலும், தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. இதற்கெல்லாம் உங்களின் அயாராத உழைப்பும், ஒத்துழைப்பும் தான் காரணம் என என்னால் உணர முடிகிறது என்றார்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு பட்டு விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள மல்பெரி சாகுபடி செய்த 10,602 விவசாயிகளின் 15,262 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 3,000 என்ற வீதத்தில், மொத்தம் ரூபாய் 4 கோடியே 58 இலட்சம் வறட்சி நிவாரணமாக வழங்கி சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இத்துறையின் மீது அவர்களுக்கு உள்ள அக்கறையினை வெளிப்படுத்தும் வகையில் நிதி ஒதுக்கீட்டினை வழங்கி இருப்பது மட்டுமல்லாமல், மாநில அளவில் துறையை பெருமைப்படுத்திடும் வகையில் நல்ல திட்டங்களை அறிவித்துள்ளார்கள் என்பதால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எதிர்பார்ப்பிற்கேற்ப அயராது பாடுபட்டு அவரவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடுகளை விரைந்து எய்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அப்போது, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ஹர்மந்தர் சிங், இ,ஆ.ப, பட்டு வளர்ச்சித்துறை தலைமை வன பாதுகாவலர் மற்றும் இயக்குநர் திரு.வெ.பிரபாகரன், இ.வ.ப., மற்றும் பட்டு வளர்ச்சித்துறை துணை இயக்குநர் திரு.வி.கோலப்பிள்ளை மற்றும் பலர் உடன் இருந்தனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9